**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 337/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. பன்னீர் செல்வம் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ.தங்கத்துரை | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து நூறு நாள் வேலைத்திட்டத்தில் பணிச் செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் 14 வது வார்டு உறுப்பினராக பணிச்செய்தேன். 14.10.2016ம் தேதி நுள்ளிவிளையில் உள்ள சகாயமாதா குருசடியில் மாலை 07.30 மணி அளவில் தண்ணீர் வருகிறதா என்று பார்த்துவிட்டு நான் சென்றபோது 2 நபர்கள் பைக்கில் வந்து நான் கழுத்தில் அணிந்திருந்த மூன்றரை பவுன்தங்க சங்கிலியைப் பறித்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

2. அந்த 2 நபர்களையும் நான் சரியாக பார்க்கவில்லை. சம்பவம் சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் மனுக்கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் எனது தங்க சங்கிலி கிடைத்துவிட்டதாக கூறியதின் பேரில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது செயினை பெற்றுக்கொண்டேன். **மேற்படி செயின் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.